**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – நாராயணசாமி

தேதி 16.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---

**தலைப்புச் செய்திகள்**

- இந்திய வீரர்களின் தைரியமும், வீரமும் 1971ஆம் ஆண்டு போரில் இந்தியாவுக்கு வெற்றி தேடி தந்ததாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- 3 நாள் பயணமாக புதுடெல்லி வந்துள்ள இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயகே, பிரதமர் திரு. நரேந்திர மோடியை இன்று சந்தித்து, பேச்சு வார்த்தை நடத்தினார்.
- தபேலா இசைக் கலைஞர் சாகீர் உசேன் மறைவுக்கு குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.
- இந்தியா-பாகிஸ்தான் போர் வெற்றி தினத்தை ஒட்டி, கடற்கரை சாலையில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்தில், புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

---

<u>வெற்றி தினம் 1 (16)</u>

**1971ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்தியா வெற்றிபெற்ற தினம் இன்று விஜய் திவஸ்-ஆக கொண்டாடப்படுகிறது. இந்நாளையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், இந்திய வீரர்களின் தைரியமும், வீரமும் 1971ஆம் ஆண்டு போரில் இந்தியாவுக்கு வெற்றி தேடி தந்ததாக கூறியுள்ளார்.**

**வீர தீரமிக்க நெஞ்சங்களின் ஒட்டுமொத்த தியாகத்தையும் நாடு என்றும் நினைவில் வைத்திருக்கும் என்றும், போர்க்களத்தில் அவர்கள் படைத்த சாதனை ஒவ்வொரு இந்தியரின் உணர்வையும் தூண்டுவதாக தெரிவித்துள்ளார்.**

**குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் விடுத்துள்ள செய்தியில், விஜய் திவஸ் வெற்றி தேடித்தந்த போர் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்துவதாகக் கூறினார். இந்திய வீரர்களின் வீரமும், உறுதிபாடும் ஈடு இணையற்றது என்றும், தன்னலமற்ற தியாகம் புரிந்த நாயகர்கள் வரலாறு படைத்திருப்பதாகவும், ஒவ்வொரு இந்தியருக்கும் தேசப்பற்றை ஊக்குவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டுக்காக அவர்கள் ஆற்றிய சேவையை என்றென்றும் போற்றுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளதாகவும் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.**

<u>வெற்றி தினம் 2 (20)</u>

**பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், நாட்டை காபப்தற்காக இன்னுயிர் ஈந்த இந்திய வீரர்களுக்கு நமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளார். அர்ப்பணிப்பு உணர்வோடும், நிலையான பாதுகாப்பு, சிந்தனையோடும் நாட்டை காப்பதற்கு எதிரிகளுடன் தீரத்துடன் போராடிய வீரர்களை இந்நாளில் தாம் நினைவு கூர்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர்களின் அசைக்க முடியாத வீரத்திற்கும் தியாகத்திற்கும் தலைவணங்குவதாகவும் அவர்கள் காட்டிய முன்னுதாரணம் வரும் சந்ததியினருக்கு நாட்டுப்பற்றை**

ஊக்கவிப்பதாகவும், முக்கிய வரலாற்று பதிவாக விஜய் திவஸ் அமைந்துள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் வெற்றிக்கு வித்திட்ட வீரர்களை விஜய் திவஸ் நாளில் தாம் வணங்குவதாக, பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். நாட்டுப் பற்று தளராக தைரியமும் இருந்ததால்தான் 1971ஆம் ஆண்டு போரில் நாட்டை காக்கும் பணியில் நமது வீரர்களால சிறப்பாக செயலாற்ற முடிந்ததாக குறிப்பிட்டார்.

இந்திய வீரர்களின் வெற்றி வேட்கையை இந்நாளில் தாம் போற்றுவதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார். நாட்டை காக்க வேண்டும் என்ற தன்னலமற்ற ஈடுபாடு இந்தியாவையும், நமது தேசத்தின் கொடியையும் உயர்த்தி பிடித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

---------------------------------

<u>*இலங்கை அதிபர்* 1 (17)</u>

இலங்கை அதிபர் திரு. அனுர குமார திச நாயக்கே, 3 நாள் பயணமாக நேற்று புதுடெல்லி வந்தடைந்தார். அந்நாட்டு அதிபராக பொறுப்பேற்ற பின் முதல் முறையாக இந்தியா வரும் திரு. அனுர குமார திசநாயகே-வை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் வரவேற்றனர். குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று காலை பாரம்பரிய முறைப்படி இலங்கை அதிபருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

3 நாள் பயணமாக புதுடெல்லி வந்துள்ள திரு. அனுர குமார திசநாயகே, பிரதமர் திரு. நரேந்திர மோடியை இன்று சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்தும், பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் குறித்தும் பேச்சு வார்த்தை நடத்தினார். இன்று மாலை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் ஆகியோரையும் இலங்கை அதிபர் சந்தித்து பேச உள்ளார்.

இலங்கை அதிபரின் வருகை குறித்து வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இருதரப்பிலும் பயன்தரத்தக்க ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் இருதரப்பு பேச்சுக்கள் அமையும் என்றும், புதுடெல்லியில் நடைபெற உள்ள முதலீட்டாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சியிலும் இலங்கை அதிபர் கலந்து கொள்ள உள்ளதாகவும்

*__இலங்கை அதிபர்__* 2 (5)

தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நிதி ஆண்டில் இந்தியா-இலங்கை இடையேயான இருதரப்பு வர்த்தகம் 5.5 பில்லியன் டாலரை எட்டி உள்ள நிலையில், இலங்கை அதிபரின் முதலீட்டுக்கான சந்திப்பு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்றும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---------------------------------

*__அரசியல் சாசனம்__* (8)

அரசியல் சாசனத்தின் 75 ஆண்டுகால் பயணம் குறித்த சிறப்பு விவாதம் தற்போது மாநிலங்களவையில் நடைபெற்று வருகிறது. கேள்வி நேரத்தை ஒத்தி வைத்து நடைபெறும் இந்த சிறப்பு விவாதத்தை தொடக்கி வைத்து பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலாசீத்தாராமன், புனிதமான அரசியல் சாசனத்தின் மேண்மையை போற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டை நிலைநாட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

75 ஆண்டுகால அரசியல் சாசனம் நமக்கு அளித்த அனுபவங்கள், மேலும் நம்மைசெம்மைப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

---------------------------------

*சாகீர் உசேன் 1 (14)*

பிரபல இந்துஸ்தானி தபேலா கலைஞர் சாகீர் உசேன் காலமானார். அவருக்கு வயது 73. அமெரிக்காவில் உள்ள சான் பிரான்சிஸ்கோ மருத்துவமனையில் மாரடைப்பு காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்து சாகீர் உசேன் நேற்று இரவு காலமானதாக அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். இசைத் துறையில் இவர் படைத்த சாதனைகளுக்காக 1988ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் பத்மஸ்ரீ விருதும், 2002ஆம் ஆண்டு பத்மபூஷன் விருதும், 2023ஆம் ஆண்டு, பத்ம விபூஷன் விருதும் வழங்கி கவுரவிக்கப்பட்டது. 60 ஆண்டுகளுக்கு மேல், தன்னிகரற்ற தபேலா கலைஞராக சாதனை படைத்த சாகீர் உசேன், 5 முறை உலகின் மிக உயரிய கிராமி விருதுகளை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் மறைவுக்கு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

*சாகீர் உசேன் 2 (5)*

பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், தபேலா மேஸ்ட்ரோ என உலக அளவில் இசை ரசிகர்களால் போற்றப்பட்ட சாகீர் உசேனின் மறைவு, மிகுந்த வருத்தம் அளிப்பதாகவும், இந்தியாவின் பாரம்பரிய இசையை உலக அரங்கிற்கு எடுத்துச்சென்ற சாகீர் உசேன், கோடிக்கணக்கான உள்ளங்களை தனது இசையால் ஈர்த்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---------------------------------

## வெற்றி தினம் (12)

புதுச்சேரி அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை சார்பில், இந்தியா-பாகிஸ்தான் போர் வெற்றி தினம் இன்று கொண்டாடப்பட்டது. கடற்கரை சாலையில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்தில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி தலைமையில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பொதப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், வேளாண் துறை அமைச்சர் திரு. சி. ஜெயகுமார், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன், டிஜிபி ஷாலினி சிங், ஐஜி திரு. அஜித்குமார் சிங்லா, டிஐஜி திரு. சத்தியசுந்தரம், முன்னாள் ராணுவ வீரர்கள் ஆகியோர் பங்கேற்று மரியாதை செலுத்தினர். தொடர்ந்து முப்படை நலத் துறையினரும், காவல் துறையினரும், போரில் உயிர்நீத்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

---------------------------------

## நல்லாட்சி வாரம் (10)

காரைக்கால் மாவட்ட நிர்வாகம், வரும் 19ஆம் தேதி முதல், 25ஆம் தேதி வரை,Good governance week எனப்படும் நல்லாட்சி வாரத்தை கொண்டாட உள்ளது. இதனை முன்னிட்டு, செய்தியாளர்களிடம் பேசிய காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு. மணிகண்டன், அனைத்து துறைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு, நல்ல நிர்வாகத்தின் மிக முக்கியமான அம்சம், அரசாங்கத்திற்கு உள்ள நடைமுறைகள் மற்றும் அதனை எளிமைப்படுத்துவது, குடிமக்களை மையப்படுத்திய நடைமுறைகளையும், மக்களிடம் நட்புறவை மேம்படுத்துதல் போன்றவற்றை மையமாக கொண்டு, இந்த நல்லாட்சி வாரம் கடைபிடிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

---------------------------------

ஏனாம் (6)

ஏனாமில், மண்டல அலுவலர்கள் மற்றும் திட்ட வரைதல் அலுவலர்களுக்கான தணிக்கை விழிப்புணர்வு நிகழ்ச்சியை சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம் குத்துக் விளக்கேற்றி தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, பொதுக் கணக்குக் குழு தலைவர் திரு. கே.எஸ்.பி ரமேஷ், மதிப்பீட்டுக் குழு தலைவர் திரு. நாஜிம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

----------------------------------